**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 72/2015**

**வழக்கு சாட்சி: PW.16**

**தேதி: 14.11.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **தனுஷ்கொடி** | **ஜாதி:** |
| **கணவர் பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் திருமாஞ்சோலை உயர்நிலைப்பள்ளியில் 2014 முதல் 2018 வரை தலைமையாசிரியையாக பணியாற்றி தற்போது ஓய்வுப் பெற்றுவிட்டேன். மேற்படி பள்ளியில் எங்களுடன் பெத்தலீஸ் என்ற ஆசிரியர் வேலைப் பார்த்துள்ளார். ஆனால் அவரை நான் பார்த்ததில்லை. 2012ம் வருடம் அக்டோபர் வாக்கில் அவர் பள்ளிக்கு வராததை பற்றி விசாரித்தார்கள். நான் சொன்னேன். போலீசார் விசாரிப்பதற்கு முன் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பிருந்து பெத்தலீஸ் பள்ளி வரவில்லை வருகை பதிவேட்டை பார்த்து தான் போலீசாரிடம் மேற்படி விபரம் குறித்து சொன்னேன். அவருடைய சம்பள பட்டியலைக் கேட்டார்கள், கொடுத்தேன். அவருடைய வருகைப் பதிவேடு குறித்து நான் வழங்கிய நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெத்தலீஸ் சம்பளம் குறித்து நான் வழங்கிய ஆவணம் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் எவ்வாறு இறந்தார் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆவணங்களின் அடிப்படையில் தான் போலீசார் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தேன்.